உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஹு வைகாசி மீ உசுஉ (1944 ஜூன் மீ 8 வியாழக்கிழமை) [இல சஅ

## ருஷ்யாவைப் பற்றி அறியக்காந்திஜீயின் ஆவல்

### கார்ள்மாக்ஸின் புத்தகங்களைச் சிறையில் வாசித்தாராம்

மறுபடியும் சினிமா பார்த்தார்

மகாத்மா காந்தி ஆகாகான் அரண்மனையில் 21 மாதம் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தகாலை அவர் தமது தினசரி அலுவல்களுக்கிடையே பல புத்தகங்களையும் வாசித்து வந்திருக்கிறாரென்று இந்தியப் பத்திரிகையொன்றின் விசேஷ நிருபர் கூறுகிறார். அவர் மேலுங் கூறுவதாவது:—

கார்ள்மாக்ஸ் எழுதிய 'மூலதனம்' என்னும் பொதுவுடைமைவாதப் புத்தகத்தின் இரண்டு பாகங்களையும் சோவியத் ருஷ்யாவைப் பற்றிய மற்றும்பலபுத்தகங்களையும் அவர் வாசித்தார். யுத்தத்தின் போக்கையும் சர்வதேச நிலைமையையும் அவர் நுணுகி ஆராய்ந்து வந்தார். ருஷ்யரின் வெற்றிகள் காந்திஜியின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தனவென்றும் ஒரு தடவை இந்த வெற்றிகளை இட்டுவதற்குப் பின்னாலிருந்து உதவிசெய்யும் சக்திகளை அறிந்துகொள்ள அவர் விரும்பினாரென்றும் சொல்லப்படுகிறது.

அவரது தேகநிலைமை மோசமாக இருந்தும், அவர் 'மொஸ்கோவுக்குத் தூது'' என்னும் படத்தைப் பார்த்தது ருஷ்யாவைப் பற்றி அறிந்துகொள்வதில் அவருக்கு இருக்கும் ஆவலைக் காட்டுகிறது.

மறுபடியும் சினிமா பார்த்தார்

காந்திஜியின் தேகநிலைமையைப் பற்றி அவருடைய டாக்டர்கள் அறிக்கை எதுவும் விடுக்கவில்லையென்றாலும் காந்திஜி மிகவும் குணமடைந்திருப்பதாகக் 'காந்திக்ராம்' வாசிகள் கூறுவதிலிருந்து தெரிகின்றது. அவருடைய குடற் கோளாறுகளும் படிப்படியாகமறைந்துகொண்டு வருகின்றன. 'விஸிட்டர்'களுடன் அவர் மிக உற்சாகமாகத்தான் இருக்கிறார். சென்ற இரண்டு மூன்று தினங்களாக அவர் 'விஸிட்டர்'களுடன் தாராளமாகப் பேசுவது பாதகமான நிலைமை எதையும் விளைவிக்கவில்லை.

பண்டித குனஸ்ரூ திரு. வ. வி. தக்கர் ஆகியோர் சனிக்கிழமை மாலை மகாத்மாவைச் சந்தித்து அவருடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மாலைப்பிரார்த்தனைகளுக்குப் பின்னர் காந்திஜி 'ராமராஜ்ய' என்ற ஹிந்திப்பேசும் படத்தின் சில பகுதிகளைப் பார்த்தார்.

## பண்டித மாளவியாவின் தேகநிலை

அலகாபாத்து யூன் 4—

சுகவீனமாக இருக்கும் பண்டித மதன் மோஹன் மாளவியாவின் தேகநிலை கவலைக்கிடமாக இருக்கிறது. அவர் இன்று ஓரளவு குணமடைந்திருந்தாலும் பலவீனமாகக் காணப்படுகிறார்.

# காந்திஜீ வெடிகுண்டைவீசிவிட்டாரா?

### காந்திஜி ஜெயக்கருக்கு எழுதிய கடிதம்பற்றி அபிப்பிராயம்

புதுடில்லி யூன் 1—

"நான் எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் திட்டமாகவும் சம்பூரணமாகவும் பதில் வைத்திருக்கிறேன். நான் சொஸ்தமடைந்ததும், என்னைச் சுதந்திரமாக வைத்திருந்தால் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லுகிறேன்."

1942-43 கலவரங்களுக்குக் காங்கிரஸ்தான் பொறுப்பாளி என்று அரசாங்கம் வெளியிட்ட பிரசுரத்தில் அடங்கியுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி ஒரு அந்நியநாட்டு நிருபர் கேட்ட பல கேள்விகளுக்கு மகாத்மாகாந்தி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கேள்விகேட்ட அந்நிருபர் கூறுவதாவது:— தம்மீதும் காங்கிரஸ் மீதும் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று உலக அபிப்பிராயத்தின் முன் நிரூபிக்கக் காந்திஜி கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது.

தமது விடுதலை தேக ஸ்திதியை உத்தேசித்துச் செய்யப்பட்டதென்று அரசாங்க அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை உத்தேசித்துத் தாம் சொஸ்தமடைந்ததும் தம்மை மீண்டும் காவலில் வைக்கும்படி காந்திஜீயே அரசாங்கத்தைக் கேட்பார் என்று ஆகார பூர்வமாகச் சொல்லப்படுகிறது.

காந்திஜி யோசித்து ஒரு அரசியல் அறிக்கையை விட இன்னும் இரண்டுவாரமாகும் எனத் தெரிகிறது.

சென்ற சில தினங்களாக அவர் தன் நண்பர்களுடன் அரசியல் விஷயமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகிறார்.

ஸேர். தேஜ் பகதூர் சப்ரூ டாக்டர் எம் ஆர் ஜெயக்கர் பண்டித மதன் மோஹன் மாளவியா மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் மற்றும் பல பிரமுகர்கள் தற்கால அரசியல் நிலைமைபற்றித் தங்கள் அபிப்பிராயத்தைக் கடிதங்கள்மூலம் காந்திஜிக்குத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

தினமணி

புதுடில்லி அபிப்பிராயம்

'பெரிய வெடிகுண்டு' என்று புதுடில்லியில் உத்தியோக வட்டாரங்களிலும் உத்தியோகப் பற்றில்லாதவர்களின் வட்டாரங்களிலும் மகாத்மா காந்தி டாக்டர் ஜெயக்கருக்கு எழுதிய கடிதத்தைப்பற்றி மூன்றே வார்த்தைகளிற் சுருக்கமாக அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. ஆகஸ்ட் தீர்மானத்தைக் கைவாபஸ்பெற முடியாது. அது நீங்கிவிட்டது' என்று தெளிவாகவும் கண்டிப்பாகவும் மகாத்மா தெரிவித்த அபிப்பிராயம் புதுடில்லியில் உத்தியோக வட்டாரங்களில் ஆச்சரியத்தை உண்டுபண்ணவில்லை.

காந்திஜியும் வைஸ்ராய் வேவல் ... [illegible]

...பென்று இங்கு அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. 'இந்தியாவைவிட்டு வெளியேபோ' என்ற ஆகஸ்ட் தீர்மானத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்ற சிறிய விஷயத்தை வைஸ்ராய் பிடிவாதமாக வற்புறுத்திக்கொண்டிருக்கும் வரை முட்டுக்கட்டை தீராதென்று இங்கு அபிப்பிராயம் இருந்துவருகிறது.

மனமாற்றமில்லை

முட்டுக்கட்டையை ஒழித்து ஒரு சமரஸமுடிவு செய்துகொள்ளவேண்டும் என்ற உத்தேசம் வைஸிராய்க்காவது அவருடைய ஆலோசகர்களுக்காவது இருப்பதாகத் தெரியவில்லை. யுத்தத்தில் வெற்றி பெறும் திட்டத்திலும் யுத்தப் பிற்காலப் புனருத்தாரணத் திட்டத்திலுமே அவர்களுடைய முழுக்கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது. இந்தியர்களில் ஒத்துழைக்கத் தயாராக இருப்பவர்களின் உதவி மாத்திரம் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படும். தனவந்தர்களும் இயந்திரத்தொழில் ஸ்தாபனங்களின் முதலாளிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. ஸேர் ஆர் டீஷீ தலால் நிர்வாக சபையிற் சேர்க்கப்பட்டிருப்பதிலிருந்தே இந்த உண்மை புலப்படுகிறதல்லவா?

லோர்டு வேவலும் இயந்திரத்தொழில் வர்த்தகப் பிரமுகர்களும் பிறரும் அரசியல் விஷயங்களில் கவனம் செலுத்தாமற் பொருளாதார விஷயங்களிலேயே கவனஞ் செலுத்தி வருகிறார்கள். யுத்தம் முடியும்வரையிலும் அதற்குப் பின்னரும் எவ்வளவு காலம் சாத்தியமோ அவ்வளவு காலம் இதே கொள்கை பின்பற்றப்படும் என்று தெரிகிறது.

காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்து அவர்கள் மகாத்மா காந்தியைச் சந்திக்கும்படி செய்வதுதான் இப்பொழுதுள்ள அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கு வழி என்று இந்த அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், புதுடில்லி உத்தியோக வட்டாரங்களில் இப்பொழுதுள்ள மனப்பான்மையைப் பார்க்கும்போது மேற்கூறியவாறு ஒன்றும் ஏற்பட்டுவிடாதென்றே தெரிகிறது.

'நேஷனல்கால்' அபிப்பிராயம்

"மகாத்மா காந்தி டாக்டர் ஜெயக்கருக்கு எழுதிய கடிதம் தக்க சமயத்தில் உதவியாக இருக்கக் கூடிய முறையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது" என்று 'நேஷனல் கால்' அபிப்பிராயம் எழுதியிருக்கிறது:

நேஷனல்கால் மேலுங்கூறியிருப்பதாவது:— ஏனெனில் இந்தக்கடிதம் மகாத்மாவின் உள மனப்பான்மையையும் அவருடைய விடுதலைக்குப்பின் அவர் என்ன நினைக்கி...

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## சிங்களம் வழிகாட்டுகிறது

### அரசாங்கசபைத் தீர்மானத்துக்கு இந்தியாவில் பாராட்டு

தமிழும் சிங்களமும் இலங்கையின் ராஜாங்க பாஷையாக வேண்டுமென்ற தீர்மானம் சமீபத்தில் இலங்கை அரசாங்கசபையில் நிறைவேற்றப்பட்டதல்லவா? இதைத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பாராட்டித் தலையங்கக் குறிப்புகள் எழுதியிருக்கின்றன. மதுரையிலும் சென்னையிலும் இருந்து வெளிவரும் பிரபல தமிழ்த் தினசரியான 'தந்தி' பத்திரிகை சிங்களம் வழிகாட்டுகிறது என்ற தலைப்புடன் எழுதியுள்ள தலையங்கத்தைக் கீழே தருகிறோம்:—

'தாய்மொழியான சிங்களமும் தமிழும் அரசாங்க மொழியாக்கப்படவேண்டும். பாடங்கள் யாவும் தாய்மொழியிலேயே போதிக்கப்படவேண்டும். ராஜாங்கசபை கிராம ஸ்தலங்கள் முதலியவற்றின் நடவடிக்கைகள் தாய் மொழியிலேயே நடக்கவேண்டும்' என்று அரசாங்க சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மேற் குறிப்பிட்ட செய்தி காணும்போது மேல்நாடுகளிலுள்ள சுதந்திர நாடுகளில் ஏதாவதுதான் இத்தீர்மானத்தை நிறைவேற்றி வைத்திருக்க வேண்டும் என்று எண்ண இடமளிக்கிறதல்லவா?

ஆனால் உண்மையை அறிந்தால் நமக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியும் பூரிப்பும் பெருமையுந்தான் ஏற்படுகின்றன.

மேற்காட்டியபடி தீர்மானித்தது வேறெந்தச் சுயேச்சைநாட்டு அரசாங்கசபையுமல்ல. நமது தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும், இலங்கைத்தீவின் அரசாங்க சபைதான் இத் தீர்மானத்தைச் சென்ற 24ந் தேதி நிறைவேற்றி வைத்திருக்கிறது. இதைக்கண்டு தமிழர்களாகிய நாம் ஒருவகையிற் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தாலும் அந்த சமயத்தில் வெட்கத்தாலும் அவமானத்தாலும் தலைகுனியத்தான் வேண்டியிருக்கிறது.

ஏனெனில், இலங்கை சிங்களவர்களின் ஆதிக்கத்திலுள்ள ஒருநாடு. மேலும், சுதந்திரநாடும் அல்ல, பிரிட்டிஷ் ஆட்சி வர்க்கத்தின் கோலாட்டத்தின்படி நடக்கவேண்டிய அடிமைநாடு. அதுவும் மற்றும், ஆங்கிலநாட்டுத் தோட்ட முதலாளிகள் ஆதிக்கமும் அங்கு அதிகம் உருவாகியுள்ள ஒரு சின்னஞ்சிறு பிரதேசமே. தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிறு டிஸ்திரிக்டின் விஸ்தீரணம்கூட இல்லை. தமிழ்மொழி வழங்குவது வடகோடியிலுள்ள யாழ்ப்பாணப் பகுதியில்தான். இன்று வரை அவர்கள் தங்களை அசல் ஆங்கிலேயர்களாகவே பாவித்து நடந்து வந்தனர். வீட்டில் குழந்தைகளுடனும் பெண்களுடனும்பேசுவதும் ஆங்கில மொழிதான் என்பதும் உண்மை.

இப்படிப்பட்ட நாட்டின் ராஜாங்க சபை தமது அயல்நாட்டு மொ...

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண ௵
வைகாசி ௴ உசுஉ வியாழக்கிழமை

## யுத்தநிலை

இத்தலியின் பிரதான பட்டினமும் உலகத்திலுள்ள புராதன நகரங்களுளொன்றுமாகிய ரோமாபுரி சென்ற ஞாயிற்றுக்கிழமை (4-6-44) இரவு பிருத்தானிய அமெரிக்க ஐக்கிய சைநியத்தவரால் ஜர்மனியரிடமிருந்து பிடிக்கப்பட்டாயிற்று; இச்செயல் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர்க்குச் சிறந்த வெற்றிப்பாடாகும். மேலும் இந்த வெற்றிப்பாடு ஐக்கியராச்சியத்தினரால் சென்ற ஒன்பது மாசங்களாகக் கடுஞ் சமர் புரிந்து அதிக பொருட்செலவோடும் உயிர்ச்சேதத்தோடும் அதிக சிரமப்பட்டுப் பெற்றதாகும். ஆயினும் இது ஐக்கிய ராச்சியத்தினர்க்குத் தரமான வெற்றியென்று நாம் நினைக்கின்றோம்; இந்தப் புராதன நகருக்கு எவ்வகையான பங்கமும் சேதமும் நேராமல் ஐக்கிய ராச்சியத்தினரும் ஜர்மனியரும் கருமம் ஆற்றியிருக்கின்றனர் என்பது அந்நகரிலுள்ள பிரதம குருவானவருடைய கூற்றைக் கொண்டு அறியக்கிடக்கின்றது. ரோமாபுரியைச் சிதைக்க விட்டுவைக்கின்ற காரணம்பற்றியே தம் சைநியம் பின்வாங்க நேர்ந்ததென ஹிட்லர் தெரிவிக்கின்றார். அவர் கூற்று நிசமோ! அன்றேல் எப்படி யானாலும் ஆக்கவியமுண்டிய ஜர்மனியர் செய்யவிருக்குஞ் சாகசங்கொண்டே அறியத்தக்கது.

ரோமாபுரி ஐக்கியராச்சியத்தினர் கைப்பட்டமையினால் ஜர்மனியருக்கு இனிமேற் பிரதிகூலமும் ஐக்கியராச்சியத்தினர்க்கு அநுகூலமும் வருமென நாம் எதிர்பார்த்திருத்தல் பிழையாகாது. ரோமாபுரி ஐக்கியராச்சிய சைநியத்தினர் கைப்பட்டவுடன் இத்தலியின் அரசராகிய விக்டர் இமானுவல், சங்கேதப்படி தமது ஒடுங்கிய ராச்சியத்தைத் தமதுடைய முடிக்குரிய குமாரனிடம் ஒப்புவித்து விட்டாராம். இதுகாறும் ஐக்கியதத்துவ ராச்சியத்தினரின் கைப்பட்ட பாகம் இத்தலிய நாட்டின் பாதியேயாகுமெனவும், இன்னும் சரிபாதி ஜர்மனியர் கையிலும் அவர்களுடன் சேர்ந்து நிற்கும் முஸோலினியின் செல்வாக்கிலும் இருக்கின்றதாம். இந்தப் பாதிப்பாகத்தையும் பற்றிய பின்னே ஐக்கியராச்சியத்தினர்க்கு இத்தலி விஷயமாகப் பூரண வெற்றியுண்டென்று சொல்லலாம். இத்தலிய சர்வாதிகாரியாகிய முஸோலினி சிறைப்பட்டாரென்றும், மனமாறாட்டமுற்றிருக்கின்றாரென்றும் தற்கொலை செய்துவிட்டாரென்றும் பலவிதமான செய்திகள் முந்திப் பிறந்தனவல்லவா; ஆனால் இப்பொழுது முஸோலினியின் பேச்சை அறியும்போது முஸோலினியிடத்துள்ள ஆங்காரம் இன்னமுங் குறையவில்லையெனலாம். "ரோமாபுரி பகைவர் கைப்பட்டமையினாலே நாம் எவ்வாற்றாலும் தளர்ச்சியடைந்துவிட்டோம் எங்கள் நிச்சயத்தினின்றும் தவறிவிட்டோமென எண்ணிக்கொள்ளவொண்ணாது; ரோமாபுரியிலிருந்து சமர் செய்தால் அந்தப் புராதன நகரம் பகைவராற் சிதைக்கப்படுமென்ற காரணத்தைக் கொண்டே ஜர்மனிய படை பின்வாங்கியது; எமக்கு வெற்றி வருமளவும் நாம் யுத்தஞ் செய்யவேண்டும்' என்று முஸோலினி இப்பொழுது வீரம் பேசுகின்றார்; ரோமாபுரிக்குச் சேதம் வராமற் காப்பது முஸோலினி ஹிட்லர் என்னும் மகான்களுடைய நோக்கமானால், ஐக்கிய ராச்சியத்தார் நிலையை சைநியத்தை ரோமாபுரிக்குச் சமீபத்தில் வரவொட்டாமல் முந்தியே தடுத்துப் புறங்காட்டச் செய்திருக்கலாகுமே.

இவ்விஷயம் இவ்வளவிலிருக்க அமெரிக்கரும் பிருத்தானியரும் நெடுநாளாகக் காத்திருந்த இரண்டாம் யுத்த முனையை இப்பொழுது தொடங்கிவிட்டனர். ஐக்கிய சைநியம் பிரான்ஸ் நாட்டின் வடகரையில் வந்து இறங்கிவிட்டதென்றும் ஐக்கிய கடற்படையும் ஆகாயப்படையும் வரைவின்றி அங்கே குண்டுப்பிரயோகஞ் செய்கின்றனவென்றும், வந்திறங்கிய ஐக்கிய படையோடு ஜர்மனியர் எதிர்த்துப் போர்புரிகின்றனரென்றும் செய்திகள் பிறக்கலாயின. ஐக்கியராச்சியத்தினர் இரண்டாம் யுத்த முனையைத் தொடக்கவேண்டுமென்ற கேள்வி ஸ்டாலினுடையதாகும். இப்படித் தொடங்கியது ஸ்டாலினுக்குத் திருப்தியாகவேயிருக்கும். சில வாரங்களாக ருஷிய ஜர்மனிய யுத்தத்தைப்பற்றிய சமாசாரம் யாதும் வரவில்லையெனலாம். ஆனால் இனிமேல் ருஷியமுனையிலும் கொடிய யுத்தம் நடைபெறுமெனக் காத்திருக்கலாம். ஜப்பானியருக்குஞ் சீனருக்குமிடையே நடக்கும் யுத்தத்தில் சீனா அதிகம் முன்னேற்றமடைவதாகப் புலப்படவில்லை, ஆசிய யுத்தமுனையில், கோகிமா முழுவதும் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினரால் திருப்பிப் பிடிக்கப்பட்டதெனச் சொல்லப்படுகின்றது. இப்பொழுது நிகழ்வனவற்றையெல்லாம் தொகுத்து நோக்குமிடத்தில் இனித்தான் கோரமான யுத்தம் நடக்கப்போகின்றதென்பதும் ஐக்கியராச்சியத்தினர்க்கு வெற்றி வருங்காலம் சமீபித்துவிட்டதென்பதும் நாம் காத்திருக்கத்தக்கனவாகும்.

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர் — 5)

### "கள்ளினு முளதுகொல் கருத்தழிப்பதே"

விசுவநாதனும் பாலசிங்கனும் கடற்கரையை யடைந்து அங்குள்ள மணலின்மீது இருந்தனர்; கடல் பெருக்கில்லாத நேரம்

பாலசிங்கன்: (விசுவநாதனைப் பார்த்து) "அண்ணா, சடுதியிலே உன்னுடைய எண்ணம் மாறுபட்டதற்குக் காரணமென்ன? நீயேயோசித்து மதுபானத்தையும் என்னையும் வெறுக்கத் துணிந்தாயோ? இல்லையேல் உனக்கு யாரும் புத்தி புகட்டினரோ? அல்லாவிடில் உனது மாமன் வீட்டார் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு உனக்குப் பெண்தரப் பின்னிற்பரென்றெண்ணிப் பயப்படுகின்றாயோ? கட்குடித்தல் நல்ல பழக்கமென்று நான் சொல்ல வரவில்லை; ஆனாலும் அந்தப் பழக்கம் அந்தக்காலத்திலும் இந்தக் காலத்திலும் உண்டுதானே; ஆண்கள் மாத்திரமல்ல பெண்களும் மதுவருந்தினரென்று சங்கநூல்களிலும் அவற்றிற்குப் பிற்பட்ட கந்தபுராணம் இராமாயணம் முதலிய புராணேதிகாசங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றதே; உன்னோடொத்த தமிழ்க்கல்வி என்னிடத்தில் இல்லையென்பது நிசமானாலும் நானும் தமிழ் நூல்களை ஆராய்ந்திருக்கின்றேன்; இந்தக் காலத்திலே எச்சாதியாருள்ளும் எச்சமயத்தாருள்ளும் குடியாதவர் சிலர் குடிப்பவர் பலரென்பதை நீ அறியாயா? அளவு கடந்து மதுபானஞ் செய்யவொண்ணாதென்ற கொள்கையை மாத்திரம் நானும் ஏற்றுக் கொள்ளுகின்றேன்; மழைக்கால இருட்டானாலும் மதி கொம்பிழக்கப் பாயாது என்ற விதமாக, நான் எவ்வளவு குடித்தாலும் மதி மயங்கமாட்டேன். எதற்கும் மனந்தான் காரணம்".

விசுவநாதன்: (சிறிதுநேரம் யோசித்துவிட்டு அவனைப் பார்த்து) "பாலா, உன்வாக்குச்சாதுரியத்தை மெச்சினேன்; தமிழறிவில் நீ எனக்குக் குறைந்தவனல்லை; என்னிலும் பார்க்க இன்னமும் அதிகமான கல்வியறிவுள்ளவனென்று உன்னைச் சொல்லுதல் மிகையாகாது. மதுபானந் தீயதென்பதை நான் முந்தியே யறிந்திருந்தும் உனது கூட்டுறவால் அதனை மறந்து அத்தூர்ப்பழக்கத்தைப் பயின்றுகொண்டேன்; எனது பழைய வித்தியாகுருவாகிய பொன்னம்பலஉபாத்தியாயரே, என் செயலைக் கேள்விப்பட்டு என்னைக் கூப்பிடுவித்து ஆகவேண்டிய புத்திகளைச் சொல்லித் தெருட்டினார்; எனது மாமன் வீட்டினர் மூலமாகவே இந்த விஷயத்தை உபாத்தியாயர் அறிந்துகொண்டாரென நினைக்கிறேன்; அது கிடக்க, சங்க நூல்களிலும் புராணேதிகாசங்களிலும் அவ்வக் காலத்திருந்த ஆண்களும் பெண்களும் மதுவருந்தினரெனச் சொல்லப்பட்டிருக்கிறதென்றனையே; அது நிசந்தான்; ஆனால் அந்த மதுபானத்தை அந்த அந்த நூலாசிரியர்கள் ஆங்காங்குக் கண்டித்திருப்பதை நீ படித்துப் பார்க்கவில்லையோ; சங்கநூற்காலத்துக் கொள்கைகளுள்ளும் வழக்குகளுள்ளும் பல இக்காலத்துக்குப் பொருந்தாமையால் கைவிடப்படலாயின. புராணங்களுட் சிறந்ததாகிய கந்தபுராணத்தில் ஆண்களும் பெண்களும் மதுவருந்தினரென்ற இடத்திலே கச்சியப்ப சுவாமியார் என்ன தெரிவிக்கின்றார்; கள்ளையும் கட்குடிப்போரையும் பாராட்டுகின்றாரா? இல்லையே!

"விள்ளுறு நாணினர் வீழுந் தூசினர்
உள்ளுறு களிப்பினர் உரைமயங்கினர்
தள்ளுறு தம்புணர் வின்றிச் சாம்பினர்
கள்ளினுமுளதுகொல்! கருத்தழிப்பதே"

என்றல்லவா மதுவையும் மது அருந்துவோரையுங் கண்டித்திருக்கின்றார் ஆசிரிய சுவாமிகள்; புராணங்களாக, இதிகாசங்களாக, நீதி நூல்களாக எவையும் மதுபானம் பஞ்சமா பாதகத்திற் பெரும் பாவமென்று கண்டிக்கின்றன. "காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்மொழிதல்—ஈதல் மறுத்தல் இவை கண்டாய்.... செம்மை நிலையாமை பூண்டார்நெறி" என்பது நளவெண்பாவிற் கண்டது. மேலும், பாலா, நீ சங்கநூல்களில் மதுவுண்ணல் சொல்லப்பட்டிருக்கின்றதெனச் சமாதானஞ்சொல்லுகிறாய்; சொல்லப்பட்டிருக்கிறதென்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் அது நல்லதென்று எங்கேனும் சொல்லப்பட்டிருக்கின்றதா? சங்க நூல்களுள் சிறந்தது திருக்குறளென்பதை நீயும் ஒப்புக்கொள்ளுவை; எவரும் ஏற்றுக்கொள்வர்; அந்தத் திருக்குறளில் இக்கொடிய மதுபானத்தைப்பற்றி நாயனார் என்ன சொல்லியிருக்கிறார்? சொல்லுகிறேன் கேள்!

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால், என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி"

பிள்ளை செய்யும் வினைகுற்றங்களை யெல்லாம் சகித்துத் தகப்பனுக்குத் தானும் வெளியிடாது வைத்திருக்குந் தாய்தானும், தன் பிள்ளை குடித்துவெறித்துத் தன்முன்வரின் பார்க்கச் சகியாளாம்; பெற்றவளே பிள்ளை செய்யும் இந்தக் குற்றத்தைப் பொறுக்கமாட்டாளென்றால், என் மாமன் மாமி அவருடைய மகளாகிய இவர்கள் என் செயலைப் பொறுப்பார்களா? இல்லையேல் என்னை உடனே அருவருத்து வெறுப்பார்களா? ஐந்து பெருந் தீமைகளுள் இந்த மதுபானம் ஏனைய நான்கு பெரும் பாதகங்களுக்கும் ஏதுவாக இருக்கின்றது.

### "நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

இக்கொடிய மதுபானமானது தன்னையுட்கொள்பவனுடைய மதியை அறவே கெடுத்து அவனை அறிவுகுறைந்த மிருகத்தினுங் கீழாக்கிவிடுகின்றது; மனுஷனுக்குரிய சிறந்த புத்திகெடவே அவன் தான் செய்வது இன்னதென்பதையும் செய்யாதொழிவது இன்னதென்பதையும் பகுத்துணர முடியாதவனாய் மயக்கத்தினால் தீமையையே செய்கிறான்; காமம் குரோதம் முதலிய தீக்குணங்களெல்லாம் இம்மதுபானங் காரணமாக அவனுடைய உள்ளத்தில் ஒன்றன்பின்னொன்றாகவே பிறக்கின்றன. அவன் தெய்வத்தை மறப்பான், மனைவி மக்கள் பெற்றார் உற்றார் பெரியோராகிய இவர்களை மறப்பான்; வெறிகொண்ட குரங்கின் நிலைமையை அடைவான்; அவன் அந்நேரத்திலே முகம் பார்க்குங் கண்ணாடி முன்சென்று தன்னுடைய முகத்தின் விபரீத தோற்றத்தைப் பார்ப்பானாயின் பின் ஒருபோதுங் கள்ளைத் தீண்டவும் இல்லையேல் மனதாலாகத்தானுஞ் சிந்திப்பான்; கள் அவனைத் தன்வயமாக்கிக்கொண்டு குறவன் பாம்பாட்டுவதுபோல ஆட்டுகின்றது. இந்தக் கொடிய மதுபானத்தைப் பற்றிக் கவலைசெய்பவர் எத்தனைபேர்! இக்கொடிய குடியால் தம் குலங்குடிகளுள்ள பெய

(தொடர்ச்சி ௩-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத்தமிழரின் சமயம்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை அவர்கள்)

(முற்றொடர்)

## சாதனமுறை

தமிழர்களின் சமயத்தின் முடிந்த நிலையான து உண்மையை உணர்த்தலாகலின் அதனை அடைவதற்கு வேண்டிய உபாயங்களை ஆராய்வாம். முன்னர்க் குறிப்பித்தபடி நம்மை இச்சடப்பிரபஞ்சத்தில் கடவுள் இருக்கச் செய்தது, உண்மையை நாம் சிறிதுசிறிதாக உணர்ந்து கடைசியில் மேலுலக இன்பத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவர்களாக்குதற்பொருட்டாம். நாம் ஆணவமலத்தில் மூழ்கிக் கிடக்கின்றோம். நமது அறிவு முற்றும் மங்கிக் கிடக்கின்றது. நமக்குத்தனு கரண புவன போகங்களைக் கொடுத்து அவற்றின்மூலமாக நமது அறிவு இயக்கப்படுகின்றது. அநுபோகத்திற்குத் தொழிற்படுதல் அவசியம். உணர்ச்சிக்கு அநுபோகம் அவசியம். நாம் இயங்கும்போது நம்மை இயக்கத்திற்றூண்டிய கடவுளின் அருட்சக்தியை நாம் அநுபவிக்கின்றோம். இயக்கத்தால் யாம் அடைந்த அநுபவம் நம்மைப் பிரகாசப்படுத்துவதன்றி கடவுளின் அருட்சக்தியை மேன்மேலும் நுகரும்படி தூண்டுகின்றது. நமது அநுபவத்திற்குத் தக்கபடி கடவுளின் அருட்பிரகாசம் நம்மிடத்தில் துலங்குகின்றது. நாமபெறும் திருவருட்பிரகாசத்திற்கேற்றபடி நம்மை மறைத்துள்ள பாசமாகிய தடை விலகுகின்றது. இப்படித் திருவருளை யாம் பெறப்பெற நமது ஆன்மவிளக்கம் பெருகிக்கொண்டே வருகின்றது. அதனால் மலத்தின் சக்தி குறைந்துகொண்டே வருகின்றது. நாம் கடவுளின் திருவருளை முற்றும் பெறத்தக்க நிலையை அடையின் அப்போது மலத்தின் சக்தி ஒன்றுமில்லாமற் போகிறது. அப்போது யாம் நித்தியானந்தப் பேரின்ப வாழ்வைப் பெற்றவர்களாகின்றோம். கடவுளின் அருட்சக்தி இவ்வுலக முழுவதிலும் ஊடுருவியுள்ளது. இவ்வருட்சக்தியோடு நமக்கு மூன்று வகையாகத் தொடர்புள்ளது. இச்சடப்பிரபஞ்சத்தில் நாம் பக்குவமடைந்தால் நாம் அறிவுலகத்தில் கடவுளின் அருட்சக்தியைப் பெறுகின்றோம். அவ்வுலகத்திலும் பக்குவப்பட்டால் நாம் சித்துலகத்தில் கடவுளின் அருளைப் பெறலாம். தமிழர்களின் சமயம் இம் மூவுலகத்தையும் சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை அல்லது சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்ம தத்துவம் என்று கூறும். ஆன்ம தத்துவத்தில் ஆன்மாக்கள் சடவுலக மூலமாகவும் தங்கள் ஐம்புலன்கள் மூலமாகவும் வேள்வாக அருளைப் பெறுகின்றன. தாவரங்களும் மிருகங்களும், மற்ற முதலிய அஃசதனப் பொருள்களும் இத்தகைய சிறு உணர்ச்சியையே பெறுகின்றன. அவைகளின் அநுபவமும் பல திறத்தனவாயுள்ளது. அவ்வவற்றின் பரிபக்குவத்திற்குத் தக்கபடி சில உயிர்கள் ஓரறிவுங்கொண்டும் சில ஈரறிவுங்கொண்டும் சில மூவறிவுங்கொண்டும் உலக இன்பத்தையும் துன்பத்தையும் நுகர்கின்றன. இவ்வுயிர்கள் புத்தியை உபயோகிக்கக்கூடிய பரிபக்குவத்தைப் பெற்றால் அவைகளுக்கு மானுட தேகம் கொடுக்கப்படுகின்றது. அத்தேகத்தைக்கொண்டு அவை பகுத்தறிவைப் பெறுகின்றன. புத்தி தத்துவத்தில் உயிர்கள் ஈடுபட்டால் அவை உண்மையான அன்பைப்பெற அவாவுகின்றன பிறகு ஞானேயமாகின்றது.

நமது சமயத்தில் விதிக்கப்பட்ட கிரியைகளும் நியதிகளும் சித்துலகத்தை யாம் அடைவதற்கேற்ற சாதனங்களாம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிகளும் எம்மை படிமுறையாக உண்மை நெறியிற் செலுத்துவனவாம். இந்நான்கு வழிகளின் மூலமாக யாம் செல்லச் செல்ல நமக்குக் கடவுளின் அருள் மேன்மேலும் பெருகுகின்றது. கடவுளின் திருவருளை யாம் பெறப்பெற எம்மைப் பாதித்து நிற்கும் மலசக்தி குறைந்துகொண்டே வந்து எம்மை உண்மையை உணரச் செய்கின்றது.

சரியாமார்க்கத்தில் நமது புத்தியைக் கடவுளின் புறத்தொழிலிலக்கணங்களிற் செலுத்துகின்றோம். அதனாற் படர்க்கை முறையிற் பயன் கிடைக்கின்றது. கிரியை முறையில் யாம் கடவுளின் சந்நிதானத்தில் யாம் சில பணிகளைச் செய்வதால் நமக்கு முன்னிலைப் பயன் கிடைக்கின்றது. யோக வழியில் யாம் கடவுளை மனத்தில் உருவகப்படுத்துவதால் தன்மைப்பலனை அடைகின்றோம். ஞான மார்க்கத்தில் நாமாந்தன்மையை மறந்து உண்மையை அன்பின் பெருக்காகக் காண்பதால் நாம் அவ்வுண்மையோடு அத்துவித நிலையை அடைகின்றோம். முதல் மூன்று மார்க்கங்களிலும் நமது செய்கைகளால் நாம் கடவுளின் அருளைப் பெறுகின்றோம். கடைசிமார்க்கத்தில்நாம் செயலற்று நமைத்தாமே இழக்கின்றோம். முதல்மூன்று மார்க்கங்களிலும்யாம் செய்யுங் கிரியைகளும் பாவனைகளும் உண்மை நெறியைப் புலப்படுத்தக்கூடிய சாதனங்களாம். அவை பின்னர் விளக்கப்படும்.

### பாவனை அல்லது அறிகுறி

தமிழர்கள் சமயத்தில் பாவனை அல்லது அறிகுறி மூலமாகப் பல கிரியைகளைச் செய்தல் அதிகமாகக் காணலாம். இப்பாவனையை மூடநம்பிக்கையென்று சிலர் சொல்லலாம். அவர்கள் அப்பாவனைப் பழக்க வழக்கத்தை நன்றாக ஆராய்ந்தால் அதனால் விளையும் நன்மை நன்கு புலப்படும்.

மனிதனுடைய அறிவு அளவிற்கடங்கியதென்று நாம் அறிந்த விஷயம். அளவிற்கு உற்படாத கடவுளின் தன்மையை அளவிடக்கூடிய நமது சிற்றறிவுகொண்டு செய்யும் விசாரணை சரியாயிராது. கடவுளைப்பற்றி யாம் கொண்டுள்ள எண்ணம் அல்லது யாம் வழிபடும் உருவம் கடவுளிற்குப் பதிலாக ஏற்பட்டதாகும். இது பாவனை அல்லது அறிகுறியேயாகும். இதனாற்பெறப்படுவதென்னெனின் மனிதன் கடவுளின் அருளைப் பெறவேண்டுமாயின் அவன் பாவனையை அனுஷ்டிக்கவேண்டும். இது தடுக்கமுடியாதது. வரையறைக்குட்பட்டவர்கள் வரையறையில்லாத ஒரு பொருளை நாடினால் அவர்களுக்கு வழி பாவனையைத்தவிர வேறொன்றில்லை.

கடவுளைப்பற்றிய நமது எண்ணம் மாத்திரமன்று நமது நினைப்புகள் எல்லாம் அறிகுறிகளேயாகும். நமது எண்ணங்களாவன யாம் முன்னே நமது புலன்கள் வழியாகக் கண்ட பொருள்களைப்பற்றிய நினைப்புகளை மனதில் ஞாபகப்படுத்திக்கொள்ளலாம். ஆதலால் அவைகளும் பாவனையாகும். நமது வார்த்தைகளும் அப்படியேயாம். நமது வார்த்தைகள் நமது எண்ணங்களைக் குறிக்கின்றன. நமதுசெயல்கள் நமது சித்தனையைக் குறிக்கின்றன. மனிதர்கள், இடங்கள், பொருள்கள், செய்கைகள், பொருள்களின் தன்மைகள் முதலியவற்றைக் குறிக்க யாம் பெயர்களை உபயோகிக்கின்றோம். பேச்சைக் குறிக்க எழுத்தும நமது உற்சாகத் தன்மையைக் குறிக்கச் சிரிப்பும் விசனத்தைத் தெரிவிக்க அழுகையும் பாவிக்கப்படுவது எல்லோருக்குந் தெரிந்ததே. மனிதனுடைய வாழ்க்கை முற்றுமே பாவனையாலானது. மனிதனுடைய ஈடேற்றத்திற்கும் பாவனை இன்றியமையாதது.

தமிழரின் சமயக்கொள்கைப்படி இவ்வுலகமே பாவன சொரூபம். பெரியபுவனமுதல் சிறு அணுவரை எல்லாம பாவனையேயாம். கடவுள் எங்கும் வியாபி. அவருடைய உருவம் எல்லாப்பொருள்களிலும் விளக்கமுறுகின்றது, கடவுளின் உருவத்தை மனித சரீரம் அதிகமாக எடுத்துக்காட்டாநிற்கும். ஒவ்வொரு சடரூபத்திலும் கடவுளின் அருள் உண்டு. உயிர்கள் திருவருளைப் பெற்று உய்யும் பொருட்டு கடவுள் எங்குமுள்ள எல்லாப் பொருள்களிலும் பாவனை உருவமாயுள்ளாரெனக்கொள்ளுகின்றனர்.

(தொடரும்)

# இரவலர் புரவலை நீயுமல்லை புரவலர் இரவலர்க்கில்லையு மல்லர்

[சி. ஆறுமுகம் அண்ணமலைப் பல்கலைக்கழகம்]

தப்பித் தவறிக் குப்பையிலே ஒரு கீரை முளைத்துவிட்டாற் போதும். எத்தனைபோ முறை அக்கீரையினிலைகள் கிள்ளப்பட்டுவிடும். அன்றும் அக்கீரையின் முற்றாத இளந்தளிர்கள்தான் கொய்யப்பட்டன. ஏன்? பச்சடி செய்யவா? அல்லது கறி சமைக்கவா? இல்லை! அத்தளிர்கள் மட்டுந்தான் புலவர் பெருஞ் சித்திரனார் வீட்டுச் சோறுங் கறியும். அவர் வீட்டில் உப்புக்கும் வழியில்லை. நீரை உலையேற்றித் தளிரை அவித்து உண்டு வருகிறார்கள், வறுமையின் கொடுமை! புலவரின் தாய் பழுத்த கிழவி. சுருங்கக் கூறின் மயிர் வெளுத்துக் கண் மறைந்து முற்றத்திடத்தும் புறப்படமாட்டாத மூப்புடைய கிழவி. இக்கிழவியும் புலவரின் வீட்டில் படுத்த பாயுந் தானுந்தான். புலவருக்குப் பிள்ளைகள் பலர். அவர்கள் பசிக்கொடுமையால் வாடி வதங்கிக் கடக்கிறார்கள். இளம்பிள்ளை பால்குடிக்க ஆசைப்பட்டுத் தாயின் முலைகளைப் பிசைந்து பிசைந்து மெல்லுகிறது. முலைகளோ உலர்ந்து கடக்கின்றன. தாய் என் செய்வாள்? பெரிதும் பாவம்! மனம் வருந்தியுங் கணவன் மீது விருப்புற்று வாழ்க்கையை நடாத்திவருகின்றாள்.

பெருஞ்சித்திரனார் இவ்வறுமையைக் கண்ணால் கண்டும் எத்தனை நாட் பொறுத்திருப்பார்? புறப்பட்டார். வெளிமான் என்னும் சிற்றரசனொடு பெருநட்புப் பூண்டவர். அவனோ சிலநாட்களின் முன் இறந்துவிட்டான். எனவே அவன் தம்பி இளவெளிமானிடஞ் சென்றார். 'பரிசில்கொடு' எனக் கேட்டார். இளவெளிமான் மிகப்பெரிய உலோபி. சிறிது கொடுத்தான். புலவர் கொள்ளாது திரும்பினார். அதே போக்கில் குமண வள்ளலையடைந்தார். பாடினார். அவன் பரிசாக யானை கொடுத்தான், புலவர் யானையைக் கொண்டு வந்தார். வெளிமானின் ஊரையடைந்தார். யானையை அவ்வூர்க் கடிமரத்துடன் கட்டினார். நேரே வெளிமானிடஞ் சென்றார். அவ்வரசனைக்கண்டார். கண்டதும்.

"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும்
அல்லர்"

என்றார். என்னே! இரப்போர்க்கு ஈந்து பாதுகாப்பவன் நீயுமல்ல, அங்ஙனம் பாதுகாப்பவர் எம்போன்ற இரப்பவர்களுக்கு இல்லாமற் போகவில்லை. என்று நேரே நின்று அச்சமின்றிக் கூறுகின்றார். புலவனின் நெஞ்சுத் துணிவு! அவ்வளவில் நிறுத்தினாரில்லை. மன்னா, இரப்போர்க்குப் பெருந்தன்மையில்லையென நினைந்திருக்கின்றாய்; ஆனால் இரப்போர்க்குப் பெருந்தன்மையுளதாதலை இன்று என்னளவிலே காண்' என்னுங் கருத்தமைய 'இரவலருண்மையுங் காணினி' என்கின்றார். அன்றியும் 'நின்னுடைய ஊரின்கட் காவலையுடையமரம் வருந்தும்படியாக, யாம் கொண்டுவந்து கட்டிய உயர்ந்த நல்ல இலக்கணமுடைய யானையே எமது பரிசில். எனப் பரிசிலையுணர்த்து மாற்றால் ஈவோருண்மையையுங் காட்டித் தாம் பெற்ற பரிசிலையுமுணர்த்திவிட்டார். புலவர் பெருஞ்சித்திரனார் வீரவார்த்தைகள் மட்டும் பேசினாரல்லர். வீரச்செயலுஞ் செய்து விட்டார். அரசனது காவல் மரம் (கடிமரம்) வருந்தும்படியாக யானையைக் கட்டுதல் பகைவேந்தர் செயல். அவ்வாறு யானையைக் கட்டியது மன்றி அச்செயலை எடுத்தோதியுரைத்தற்கும் புலவர் துணிந்துவிட்டார். 'யாம்.பிணித்த' என்று பன்மைமுகத்தான் பெருமிதந் தோன்ற வீரவார்த்தை கூறுகின்றார். முடிவில் இளவெளிமான் அரசன் ஆதலானும், தனது நண்பனின் தம்பியாதலானும் 'கடுமான் றோன்றல்' எனச் சிறப்பாக விளித்து முன் சிறிது பொருள் கொடுப்பத் தான் கொள்ளாத மிதிப்பாடு தோன்ற 'செல்வல்யானே' என முடித்துச் செல்கின்றார். என்ன ஆச்சரியம்! பெருஞ்சித்திரனார் வீட்டின் நிலையென்ன! அரசனோடு பேசத்த வீர மொழிகளென்ன! வீரச்செயலென்ன! தமிழப்புலவனின் வீரம் இருந்தவாறென்னே! புலவரின் விருந்தை உண்போம்.

இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி
யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி
நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம்
பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல
யானே' (புறம் ௧௬௨)
திணை பாடாண்டிணை
துறை-பரிசில்விடை

## வைத்திய ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி ஓடியவர்

சென்ற வியாழக்கிழமை மாலை அங்கொடைப் வைத்திய ஆஸ்பத்திரியிலிருந்து சைமன்குட்டி ஆராச்சி சாடிரிஸ என்ற ஒரு நோயாளி தப்பி ஓடிவிட்டார்.

அவர் 1938-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ந் திகதி வைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்பட்டுக் கவனமாகக் கண்காணிக்கப்பட்டார்.

வியாழக்கிழமையன்று மாலை 5 மணிக்கும் 6 மணிக்குமிடையில் அவர் தப்பி ஓடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கற்று முற்றிய பேதைய ரிலக்கணங் கண்டோம்"

மா. சிவதாஸ், மருதானை, (கொழும்பு)

நெறியின் புறஞ்செலா நீதிசால் கோசல மாதர் நறவினை நனிமகிழ்ந் துண்பத னமைதிகா னேனென் றறைவது நம்மனோர்க் காவதொன் றன்றெனினு மதனுற் குறைவொன் று மவர்களுக் கெய்தவில்லை யென் பது திண்ணம். அவமிலாப் பூவருந் தேனுயினும் ஆகுக; மற்று மதி சிதைத் தருவழிக்கும் மதுவேயா யினு மாகுக; "மடக்கை வாய்வழி புக்கதேன் அமிர்தமாய்ப் பொலிந்த போனறவே" என றுரைக்குங் கம்பர், தீயவெங்கள்ளேயாயினுஞ் சில முடையவித்தெரிவையர்வாய்வழிச் சேர்ந்ததாலது சாகா மருந்தாக மாறிவிடும் பெற்றியைப் பேசுகின றார். செய்யவைச் சேர்ந்தனாரும் செய்யராய்த் திகழ்கின்ற வாய்மை யை ஈங்குப் பின்னுமோர் முறை சாதித்தபடியாகும். அதுவுமன்றி அரனுக்கொருபாள் 'கொடிய ஆலமு மமுதாகவில்லையோ'? பொருளின பால் நன்மையுந் தீமையுமில்லை; நன் மையுந் தீமையும் சேர்வது, அவை களை நுகர்வோர் நிலைமையினது தன்மையின அளவிற் கேற்றவா றமைகின்றது. அவ்வாறமைந்த மது அருந்தினோர்க் கிங்கு யாது செய்ததெனின,

"தாமமு ரணப் புந் தலைத்த
தண்ணகிற
றாமமுண் குழலிய ருண்ட தாகமை
ஓமவெங் குழியுகு நெய்யி
னுள்ளுறை
காமவெங் கனலினைக் கனற்றிக
காட்டிற்றே"

என்றனர் கம்பர். துறைவன் நு உரைத்தது கொண்டே இக் கோச லக் குலமாதர் குடித்தது பூவின தேனன்றி வேறொன்று மில்லை என று வாயுறுத்த வொண்ணுதெனி னும், நமனவாயில்தான் களிக்கின்று னெனடது ஓராது கன்னிகை மய லன்னுரை நெடுவரளி யாட்டங்கண் ட இராவணன்ஊட்டியகள், வேகம மிகவுடைய வேறோர் பானமாயிருத் தல் வேண்டுமென் றெண்ணுமபடி,

"நற்பெருங் கலவிச் செல்வ
கவையற நெறியை நணணி
முற்பய னுணர்ந்த தூயோர்
மொழியொடும் பழுகி முற்றிப்
பிற்பய னுணர்த றேற்றுப்
பேதைபோல் வஞ்சன செய்த
கற்பனை யென்ன வேரடிக்
கலந்தது கள்ளின வேகம"

என்னுமாற்றுல் கம்பர் அங்குவேறு படுத்திக காட்டலாகின்றனர். எனின, இருபகு காமுடைய அவ் வரக்கன அருந்திய கள்ளின் கொடு மை யென்கொ? இவ்வரிவையர் பரு கிய தேனின் மென்மை யென்கொ! ஒடிக்கலாத அக்கலளின் தீமையை அறியவேண்டு மெனின அதறகுவ மையாய்வகுத்துள்ள இருதிறத்தவரா லும் வினையும் செழுதலை நன்கு உனர்தல் வேண்டும். கலவியிலா மூடரின இழிவை உரைப்பரா பல். கறறறந்த மேனமக்களின பெருமையைக காட்டுவார் டலர்; ஆனுல், கறறறிந்த மூடரின வருப கொடுமையை வகுக்க நினைத்தவர் கம்பரே. தாம் கறறருப்பதால மாத்திரமன்றி, கலவி பபலவா ரியறகையெல்லாம நுனித்துணரத தருக்கலாலும கமபா கலவயிற பெரியரானுர். கல்லாதார் ஒரு வருக்குமே தீங்கு செயயார்; செய யினு மதற்கு தமக்கே செய்து கொண்டதாய முடியும். மறறக கற்றும் பயன தேறறுப பாழுய பேதைகள சனங்களிடைப புரியுமை ற தீமையினளவை பேசவரிது. கறறவர் என்ற பேரொனடு இருத்தலால் இவர் வேகமொடு விளம்பு கின்றவைகள் தமக்கு உறுதி பயக் கத் தக்கனவென்று ஜனங்கள் எளி தில் நம்பிவிடுதல் இயற்கையே. இன்னவாறு இவர் செய்வது கல்வி யின் [illegible]ற்பயன் உணராத பேதை மைய[illegible]லயே யன்றிச் சனங்களைக் கெடுத்தல் வேண்டுமெனும் புலலிய நோக்[illegible]தாலன்று. மற்றும் வஞ்ச கர் செயயும் கற்பனைகளும் சனங்க ளிடையே கடியவேகத்தோடு பரவி விடுகின்றது. கோசகமெதுவேனும அந்தகதில் அப்பேதையும், இவ்வஞ் சனும விளைவிக்கின்ற தீமைகள் விரைவிலும, அளவிலும தன்மை யிலும் தம்முள்வேறுபடாது இரண் டும் ஒருபடித்தாய உலகைஉழக்குவ தால ஆவ்விரு திறத்தோரு கட்க கரியஉவமைகளாய்க கள்ளிறகமைத தனர். கல்வியின பிறபயன் தோராது புலவர் மொழியொடு மட்டுமே பழகி முற்றிய பேதையரும், வஞ் சனையால பறபல கறபனைகள் செய யுங் கயவரும, இவர் எது செயற சேட்டு ஆடுவோரும், உலகனும் அரங்களில் ஏறறடிகறுங்கால் புரியு மாறே கள்ளின வேகம கலந்துள ததுயவக கணிகையரும,

"வலைய பிழவுங் கடைடார்க்
கிறதா சால மெனனத
தானவை யுருவற ரோனறும்
ஈவனைத தளகமை சானறோர்
மானபர் ஈரக்க றரை
மைந்தரைக கரட்டி வாயா
லானமை வாயபித தேனை
யபிசயத நயறுற யுறரா"

என்று எடுத்துக் காட்டிய கவியின் நுண்ணுணர்வு நம் உள்ளத்தைக் கவர்கின்றது.

இனி, கற்றதுகல்வியேனும் பலர் பேதையாவதன் சரித்திரத்தைக் கம்பர் ஊமொழும் சுவையுடைத் தாம்.

"கல்வியினுங்கில்லைச் சிற்றுயிர்க்
குற்றதுணை"
"கண்ணுடைய ரென்போர்
கற்றோர்"

என்பனபோன்ற கட்டுரைகளைக் கேட்டு முதலில், நற்பெருங் கல்விச் செல்வ நவையறுநெறியை நண்ணு கின்றனர். நண்ணித் தூய்மை வாய்ந்த புலமையோர் ஆக்கிய நூல் களைப் பயில்கின்றனர். அப் புலவர் கல்வியின் முதறபயன் கடவுளை அடைவதே என்பதை உணர்ந்து அப்பயனை யாவரும் எய்துமாறு எழுதியுளரேனும், மாணவரிற் பலர் அவர் மொழிகளை மாத்திரம் பழகி மெய்ப்பொருளைத் தோந்துகொளவ தில்லை, மொழியினைப் பயிலவதெல லாம் பொருளை அறிவதற்கெனும பான்மை போக்கி இம மாணவர், அமமொழிகளிலும் அமமொழிக ளைக் கொண்டு செய்ய வலல ஆராய்ச்சிகளிலுமே தம நிலைைச் செலுத்தி முதர்ச்சி யடைந்து, தாங கள சொலலால முழக்குகின்ற ஆறறலிற செருக்குறறும, இத தகைய மொழிப பயிறசியாலும அது கொண்டு செய்யும ஆராய்ச்சி யாலும் கிடைக்கின்ற ஊதியத்தற கவாவுடையவராகியும, "கற்றதனு லாயபயன வாலறிவன நறருள் தொ ழுவதனறு" வேறலலை எனற வாய மையை ஒருபோதும உணரவே உணராத பேதையர்களாகி வடுகின றனர். இப் பேதைமையைப் பெறு வதறகே பொருள் கொடுத்தும உடல வருந்தியும பறபலர் முயல கின்றனமை மறைபொருளன்று. பிறபயனுணர்தல் தேறறு இத தகைய பேதை[illegible] வைக்குக் கறற[illegible] வதால் உலகத்திலே செல்வாக்குடை யவராகின்றனர். அச் செல்வாக் குக் கள்ளின் வேகம்போற கலக் கின்றது.

இவ்வாறு கல்வித்துறை படிந் தும், மொழிகளிலே யலைவதன்றிப் பிறபயனறியாத அறியாமையினும் மெய்யான அறியாமை (Real ignorance) வேறெங்குளது. களளின செய்தியை இன்னது என்பதை வள்ளுவர் நூலிலுங் காணலாம. கலவியின் முறபயனுணர்ந்த வந்தத் தெய்வத் தாயலவரயார் வகுத்த 'கள்ளுண்ணுமை' என்னு மதிகாரத் தில,

"கையறி யாமை யுடைத்தே
பொருள கொடுத்து
மெய்யறி யாமை கொளல"

என்று காட்டிய பேதைமையையே கமபர்இச்செய்யுளில விளக்கியுளார் போலும். இவ்வகையில, கற்றுமக் கும் பிறர்க்குரைத்தும பறபயன உணராப் பேதையையும், வஞ்சன செய்த கற்பனையையும போல், இரா வணன் கொடுத்த கள் வேகமொடு கலந்து, அரமபையர் கருத்துஞ் சொலலு மபிரயமும மாறுபடுமாறு கலக்குவதாக, அவ் வபோதது மாதா அருந்திய தேனை அவாது அனபி னைப் பெருக்கியதனறி வேறொரு விபரீதமு மவிளைக்கவில்லை. மதுவயக் குறறு அம்மாதா புரிந்த காட்சிக ளில சில பினவருவன.

"களித்தகண மதர்பப வாங்கோர்
கனங்குழை கள்ளி னுள்ளால்
வெளிபபடு கின்ற காட்சி
வெண்மதி நிழலை நோக்கி
அளித்தன னபயம் வானத்
தரவினை யஞ்சி நவக
தொளதத்தை யஞ்ச லெனறுங்
கினியன வுரைத்து நின்றுள்"
"[illegible]ணயணி வளவத் துளளே
களிக்குத்தன முகத்தை நோக்கி
வணமது மதுவி னுசை
வீழ்ந்தென மருந்தி யுன்னி
உணமகிழ் துணைய னேநம
ஊட்டுநாள் வெம்மை நீங்கித்
தணமது யாகில யானுந்
தருவனிந் நறவை யென்றுள்"

இங்ஙனம மதுமயக்கத்தால தன் முகத்தையும், வானூர் மதியையும கள்ளினுள் கண்டு மதிபோன்று நிலவுத்த மாதர் இரண்டொருவர் வேறு காவியங்களில காட்சி தரு கின்றனர். அவர்களில் ஒருமாது ஜீவ கன காதலி குணமாலை யாவாள,

"தழைமுக மிடவயிற் கோட்டி
யேந்தி
அழனிறத் தேறலுண் மதிகண்
டையென
நிழல்முகப் பகைகெடப் பருகி
னிளவிசும்
புழலலு நோக்குவான் மதிசண்
டேனுள"

மறறவளைப் பாண்டிநாட்டில பரஞ் சோதிமுனிவர் காட்டக் காணலாம:

"மங்கையா ளொருத்தி தானுண்
டெஞ்சிய மதுவுட் டோனறுந்
திங்களை நாகமெனப்
பிரிவின்கட் டீயாய்ச் சுட்டாய்
இங்குவந் தகப்பட்டா யே
இனிவிடே னடுத்தி யென்று
அங்கொரு வள்ளங் கொண்டு
சேமித்தா ளநுக்கல செய்யாள்"

அயோத்தி மாதர்க்கும் வளையோர்க் குமுஉள்ள வேறுபாட்டை மதுப் பருகக் களித்த நிலையிலுங் காண லாம், ஏதத்தைப் பகையிறேனும அடைக்கலமானபோது அவர் தமை அருளொடு நடத்தலே பெருந்தகை. அடைக்கலமாகப்பல தலையதுதவ ராயத் தன்னுடைய குருகுப பாததிரமாய அகப்பட்டபோது அப் பகைவரைக் காத்தல பின்னும் பெருமை உடைத்து. தம நிழலைத் தோழியென்று மதுப்பருகற் களித் தவ கிட்கை படுமும அழுவுமு பல காள தமமேல தேனினறு பொழுக [illegible]ம் அளித்த [illegible] 6-ம் பக்கம்

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### வெள்ளி யூன் 9

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வாத்தியகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 கும்பகோணம் ஜே வி ராகவன் பாட்டு 5-40 தூான் ஷரீப் 6 மன்னார்குடி எம் மாணிக்கம் பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 இீப்பு அதுவே இசைநாடகம் 8 மன்னார்குடி எம் மாணிக்கம்பிள்ளை நாகஸ்வரம் 8-15 கும்பகோணம் ஜே வி ராகவன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் (ஆங்கிலம்) 10 இசைவேளை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

### சனி யூன் 10

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 நாகஸ்வரம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரைகானம் † 9 முடிவு.

1 என் பத்மநாதன் வயலின் 1-30 ஆங்கிலத்தில செய்திகள் 1-40 இரு தூலிகை † 2 தமிழில செய்திகள் 2-05 என் ஆர் பி ஐயர் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 எம் பத்மநாதன் வயலின் 5-40 திருவாங்கக்கல்யாண விளக்கம் 6 என் ஆர் பி ஐயர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 பிரிட்டனின் சேவை 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி எம் எம் தண்டபாணி தேசிகர் பாட்டு 9-15 கமலா கிருஷ்ண மூர்த்தி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கர்நாடக ராகங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு யூன் 11

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருப்புகழ்மணி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைக்கதம்பம் † 9 முடிவு.

12 கதம்பம் 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி கே ராகவன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 டி கே பட்டம்மாள் † 2-30 முடிவு.

மாலை 5 கே வி ராகவமேனன் பாட்டு 5-40 தேவாராதனை 6 திரைகானம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 உலக அரசியல் இஸலாம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் † 8 பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி கோட்டுவாத்தியம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஐரோப்பிய சங்கீதம் † 10-0 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் யூன் 12

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில செய்திகள் 8 திருச்சி வாத்திய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பூவாளூர் சுப்பையா பிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 டி ஏ சுந்தராம்பாள்பாட்டு 2 தமிழில செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை 5 பூவளூர் சுப்பையாபிள்ளை நாகஸ்வரம் 6 டி ஏ சுந்தராம்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 நாடக இசை † 8 கும்பகோணம் கே வ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு வி சுந்தரேசன வயலின் திருகோகர்ணம் ஏ மீனாக்ஷிசுந்தரம் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 திருப்புகழ் ஆ இ ரே வித்வான் 10 இசைவேளை † 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக்கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

னரக் கெடுத்து, மனைவி மக்களை விடுத்து, தாம் பார்த்த உத்தியோகத்தைத் தொலைத்து எவராலும் "சீ" என இகழப்பட்டு, எல்லாருங் கைவிட, மடிமையும் மிடிமையுமடைந்து தீரா நோயாற் பீடிக்கப்பட்டு ஓட்டாண்டியாக அலைந்து திரிந்து மாண்டவர் எத்தனையெத்தனை பேர். இந்தப் பொல்லா மதுபானம் மனுஷனாகப் பிறந்தவனுக்குச் சிறிதும் ஆகாதென்பது பற்றியல்லவா நாயனாரும்,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

என்று பணித்துள்ளார் ஆனால், கள்ளைக்காட்டிலும் நஞ்சு நல்லதென்பது என்னுடைய கருத்து; ஏன்? கள்ளெனிலோ தன்னையுண்டானைப் பலவகையான பாவத்திற்கும் பழிக்கும் ஆளாக்கி அவன் மரியாதையைக் கெடச்செய்து அவனைப்பலகாலம் நோயையும் சில சமயம் பைத்தியத்தையும் கொள்ளச் செய்து இடர்ப்படுத்தி இறக்கச் செய்யும்; நஞ்செனிலோ தன்னையுண்டவனை உடனே இறக்கச் செய்துவிடும்; பாவம் பழிகளையும் மதிப்பீனத்தையும் நஞ்சு தன்னை யுண்டானுக்குத் தேடி விடமாட்டாது; ஆனதினாற்றான் கள்ளைக்காட்டிலும் நஞ்சு நல்லதென்கிறேன்; நண்பா, மேலும் கள்ளை மட்டாகக் குடிக்கலாமென்கிறாய்; தொடக்கத்திலே சில பகல்தான் நீ கள்ளைக் குடிக்கமுடியும்; அதன்பின் கள்ளு உன் அறிவைக் குடிக்கத் தலைப்பட்டுக்கொள்ளும்; உன் சுயபுத்தி கெட்டபின் மட்டுமரியாதை உனக்கு எப்படிப் புலப்படும்; ஆனதால் அந்த எண்ணத்தை விட்டுவிடு; மதுபானமொன்று மாத்திரமல்ல, தீய உணவுகளும், தீயபழக்கங்களும் பழகிக்கொண்டால், பிறகு பழகியவன் அவைகளை விட முயன்றாலும், அவை அவனைத் தப்பிப்போக விடமாட்டா. மதுபானம் முதலிய தீய பழக்கங்கள் ஒருவனிடத்தில் முதிர்ந்துவிட்டாற் பின்னர் அவனுக்கு எவரெவர் எத்தனையெத்தனை புத்தி சொன்னாலும் அவன் கேட்கப் போவதில்லை; இதுபற்றியே வள்ளுவரும்,

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று"

என்று கூறிப்போந்தனர். அதாவது கள்ளுண்டு வெறிகொண்டு திரிபவனுக்குப் புத்தி சொல்லித் தெருட்டி அவனை மதுபானஞ்செய்ய வொட்டாது தடுக்க முயலுதல், ஆழமான தண்ணீருள் மூழ்கி அடியிற்போய்க் கிடப்போனை அத்தண்ணீருள் விளக்குப்பிடித்துத்தேடிப் பார்த்து எடுப்பதற்கு முயற்சிசெய்தல்போலுமென்பதாம். இந்தத் தீயபழக்கம் என்னிடத்தில் இன்னமும் அதிகம் முற்றாமையினால், என் உபாத்தியாயருடைய புத்தியை மேற்கொண்டு இம்மதுபானத்தை விடலானேன்; அப்பா, பாலசிங்கா நீயும் அப்படியே, என்புத்திகேட்டு இந்த மதுபானத்தை மாத்திரம் அறவே விடுவாயானால் உன்னைப் போல் உற்ற நண்பன் உலகத்திலே எனக்கு வேறு எவனுண்டு; நண்பா உன்னை இரந்து கேட்கிறேன் இதனை விட்டுவிடு" என்றான்.

### "பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே"

இவைகளையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த பாலசிங்கன் சற்றுநேரம் யாதும் பேசாதிருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு விசுவநாதனைப் பார்த்து "சிநேகிதா, நீ சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்; ஆனால் மதுபானஞ் செய்யவொண்ணாதெனவும் என்னுடன் இனிமேற் கூடித்திரியவொண்ணாதெனவும் உனக்கு ஞானம் பிறந்த ஞாயம் எனக்குத் தெரியும்" என்னலும் "அந்த ஞாயத்தை எனக்குச் சொல்லிவிடலாமே" என்று விசுவநாதன் கேட்டான். "வேறொன்றுமல்ல நீ மதுபானஞ் செய்வதையும் என்னுடன் கூடித் திரிவதையும் இன்னமும் அறிய நேர்ந்தால் உன் மாமனார் தம் மகளை மணம்முடித்துத் தரமாட்டாரென்பதல்லவா உனது நியாயம்? நீ மதுபானஞ்செய்வதை அவர்கள் வெறுப்பது தக்க நியாயந்தான்; ஆனால் உன் அரிய நண்பனாகிய என்னுடன் சிநேகஞ் செய்யக்கூடாதென்று அவர்கள் தடுப்பதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை; என் தொடர்பு உனக்கு இஷ்டமல்லாயின் இன்றே நான் பிரிந்துகொள்கிறேன்; ஆனால் கல்யாணஞ் செய்துகொள்ள முந்திய பெண் பகுதியாருக்குப் பயப்படும் நீ, அவர்களபடி மட்டு நடக்கத் தொடங்கிய நீ கல்யாணஞ் செய்து அவர்கள் வீட்டிற்குப் புகுந்துவிட்டால் பெண்டாட்டிக்கு அடிமையாவாயென்பதைச் சொல்லவும் வேண்டுமா! கல்யாணவீட்டிலேயே அழுபவள் இழவுவீட்டிற்குப் போனால் சும்மாவிருப்பாளா? செருப்பைக் காலுக்குவாரையெடுக்க கைப்பிடிவாளையும் எப்போதாவதுங் கண்டாயா? பெண்ணையும் அவளுக்குரிய இடத்திலே வைப்பதன்றித் தலையிலே தூக்கிவைக்க முடியாது; "பெண்புத்தி கேட்டிடும் பேதையும் பதரே" என்ற வாக்கியம் உனக்குத் தெரியுந்தானே; சரி, இருட்டாய்விட்டது; நீயும் உன் வீட்டிற்குப் போகலாம்; நானும் என்வீடு போய்ச் சேரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தான் பாலசிங்கன்; "அப்படியல்ல இன்னுஞ் சற்றுநேரம் இரு" என்று தடுத்துக் [illegible] தனை [illegible]

## ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஆரம்பம்

லண்டன், ஜூன் 6—

பிரான்ஸின் வடகரையில் நேசதேசப்படைகள் இறங்கிவிட்டனவென்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

நேசதேச அறிக்கை பின்வருமாறு:- 'ஜெனரல் ஈசன் ஹோவரின் தலைமையின்கீழ் நேசதேசக் கடற்படைகள் பலம் பொருந்திய விமானப்படையின் உதவியுடன் பிரான்ஸின் வடகரையில் இன்று காலை நேசதேசப் படைகளை இறக்க ஆரம்பித்தன.

கேன் பகுதியில் படையெடுப்புப் பட்டாளங்களை எதிர்த்து மூர்க்கமான சண்டை நடைபெறுவதாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

படையெடுப்பு ஆரம்பமாகிவிட்டதென்றும் லீஹவ்ரேயில் குண்டுப் பிரயோகம் நடைபெறுவதாகவும் கடல் கடந்த நாட்டு ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

நேசதேசப் படையெடுப்புக் கப்பல்களை ஜெர்மன் கடற்படைகள் சந்தித்துப் போராடுகின்றனவென்றும் அது கூறுகிறது.

ஸீன் நதி முகத்துவாரத்தில் பாரசூட் துருப்புகளை இறக்குவதைக் கொண்டு படையெடுப்பு ஆரம்பமாகியதாகக் கடல் கடந்த நாட்டு ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

## ஐந்தாவது சேனை ரோமாபுரிக்குட் பிரவேசம்

லண்டன் ஜூன் 4—

ரோமாபுரியிலுள்ள 5-வது சேனையோடிருக்கும் ராய்ட்டரின் விசேஷ நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

5-வது சேனையைச் சேர்ந்த துருப்புகள் இன்றிரவு ரோமாபுரிக்குள் பிரவேசித்துவிட்டன.

நமது முன்னணிப் படைகள் தானே இயங்கும் பிரமாண்டமான பீரங்கிகளைக்கொண்டு ஜெர்மனியர் நடத்திய எதிர்த் தாக்குதலினால் நகரின் வெளியாண்களிற் சிறிது நேரம் தங்கிநிற்கவேண்டியதாயிருந்தன. ஜெர்மானியர் கடைசித்தாக்குதல்தான் எப்போதுமே பலமாக இருந்துவந்திருக்கிறது. ரோமாபுரிக்குட் பிரவேசிக்கும் பாதையில் ஜெர்மானியர் அன்று முழுவதும் டாங்கிகளையும் தானே இயங்கும் பீரங்கிகளையும்கொண்டு பலமாகத் தாக்கி நேசப்படைகளைத் தடுத்து நிறுத்தப் பிரயத்தனஞ் செய்தனர்

ஆனால் 5-வது சேனையைச் சேர்ந்த வீரர்கள் ஜெர்மன் பின்னணிப் படைகளின் மூர்க்கமான தாக்குதல்களுக்கெதிராக டாங்கிகளையும் காலாட்படைகளையுங்கொண்டு தாக்கியவண்ணம் முன்னேறினர். அவர்கள் விடாப்பிடியாகத் தாக்கிக்கொண்டு பாய்ந்து சென்றதனால் நகரின் வீழ்ச்சியைத் தாமதப்படுத்துவதற்காக ஜெர்மனியர் செய்த முயற்சிகளெல்லாம் வியர்த்தமாயின. இன்று பிற்பகலே அவர்கள் நகர எல்லைகளை அடைந்துவிட்டனர்.

ஜெர்மானியரை ஒவ்வொரு யாராகப் பின்தள்ளிக்கொண்டு அவர்கள் நகரின் ஜன நெருக்கமுள்ள பாகத்துட் பிரவேசித்துவிட்டனர். அடிக்கடி எதிர்ப்பிருந்ததாக உத்தியோக பூர்வமாக வர்ணிக்கப்பட்டது.

ரோமாபுரியிலிருந்து வடக்கு நோக்கிப் பின்வாங்கிய பெருந்தொகையான ஜெர்மன் வாகனங்களில் 300 நாசமாக்கப்பட்டிருக்கலாமென்று பூர்த்தியடையாத புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது.

## திருஞானசம்பந்த சுவாமிகள் குருபூசை

நிகழும் தாரணஹு வைகாசிமீ 26உ (8-6-44) வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் மேட்டுத்தெருவிலுள்ள விவேகானந்தசபை மண்டபத்தில் திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் குருபூசைவிழா கொண்டாடப்படும். அத்தருணம் கந்தவனக்கோயில் அதிபரான சைவத்திருவாளர் தம்பு சி. செல்லையாபிள்ளை அவர்கள் சுவாமிகளின் வாழ்க்கையையும் சேவையையும் குறித்து ஓர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சங்கீத மாணவர் திரு. ந. இராசலிங்கமவர்கள் சுவாமிகள் அருளிய தேவாரத் திருப்பாசுரங்களுட் சிலவற்றைப் பக்கவாத்திய சகிதமாகப் பாராயணம் செய்வார்கள்.

சபித—

## அஸ்ஸாமிற் பெருமழை

### பிரமபுத்திராவில் வெள்ளம்

துப்ரி மே 26—

இங்கு மழைகாலம் ஆரம்பித்துவிட்டது. சென்ற 24 மணி நேரமாக இடைவிடாமல் மழை பெய்துகொண்டே இருக்கிறது.

பிரமபுத்திரா நதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அசகம் பக்கத்திலுள்ள நிலங்கள் எல்லாம் தண்ணீருக்கு அடியில் மூழ்கிக் கிடக்கின்றன.

மேற்படி ராத்திரி 2 அங்குலமழை பெய்தது.

## சுருட்டுத்தொழிலாளர் வேலை நிறுத்தம்

தமக்கு இப்போது கிடைக்கும் சம்பளம் போதாதென்றும், 1000 சுருட்டுக்கு 4 ரூபாவாகச் சம்பளத்தைக் கூட்டித் தரவேண்டுமென்றும், அங்ஙனம் கூட்டித்தரச் சம்மதிக்கும் வரை தாம் வேலைக்குப் போக உடன்படப்போவதில்லையென்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ் செய்திருக்கிறார்களல்லவா?

அதுசம்பந்தமாக முதலாளிமார்களுக்குமிடையே ஒருவித சமாசத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்றன.

இப்போது தொழிலாளர்கள் கேட்டபடி, 1000 சுருட்டுக்கு 4 ரூபா சம்பளங் கொடுத்தற்கு முதலாளிமார்களிற் பலர் சம்மதித்திருக்கிறதாகத் தெரிகிறது.

## மகோற்சவம்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவிலில், சென்ற செவ்வாய்க்கிழமை (6-6-44) கொடியேறி மகோற்சவம் நடைபெறுகின்றது; வருகிற ஆனி மாதம் கூஉ திங்கட்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாளாகிய அமாவாசையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## விவாகம்

### நடராஜா—சுவர்ணம்

சென்ற திங்கட்கிழமை (5-6-44) மாலை 6 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் கொழும்பு திரு. தம்பையா நடராஜா அவர்களுக்கும் உளவட்டு மந்தரி திரு. அ. மகாதேவா அவர்களின் புதல்வி திருவளர்செல்வி, சுவர்ணம்மாளுக்கும், கொழும்பிலுள்ள "பொலன்கிழார்" எனுமிடமகளில்லத்தில், பலசுற்றமித்திரர், அயலோர் சமூகத்தில் விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் பொன்னம்பலவாணேசுவரர் திருவருள் பெருகுக.

## சேர். பரனுக்கு ஞாபகார்த்த நிதி

### இந்தியாவிலுள்ள இலங்கையர் சங்கத்தின் தீர்மானம்

பம்பாய் யூன் 6—

இந்தியாவிலுள்ள இலங்கையர் சங்கத்தின் தலைவர் திரு. வி. வி. லிங்கம் வெளியிட்டிருக்கும் ஓர் அறிக்கையில் இலங்கையிலும் இந்தியாவிலும் சேர். பரன். ஜயதிலகா ஞாபகார்த்த நிதியென்ற பெயரால் ஒரு நிதி திரட்ட உத்தேசித்திருப்பதாகவும் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நல்லெண்ணம் ஏற்படுத்துவதற்கு அவர் விடாது உழைத்துவந்தாரென்றுங் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிதிக்கு உதவிசெய்யுமாறு அவர் பொதுஜனங்களை வேண்டிக்கொண்டிருக்கிறார்.

இலங்கையர் சங்கத்தின் கூட்டத்தில் சேர். பரன். ஜயதிலகாவின் மரணத்துக்கு அனுதாபந் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சேர். பரன் ஜயதிலகா இலங்கைமக்களின் இருதயங்களைக் கவர்ந்துவிட்டாரென்று மிஸ்றர். லீடரின் யு. செய்சா குறிப்பிட்டார்.

## கல்கத்தாவில் 6 பேர் பட்டினிக்குப்பலி

கல்கத்தா யூன் 3—

29-ந் தேதி இங்குள்ள ஆஸ்பத்திரிகளில் 6 நோயுற்ற அகதிகள் மாண்டனர். 15 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். இருவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

யாழ்ப்பாணத்திருந்து யான் போனபோது பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை தாம் வெளியிட்ட சில நூல்களையும் சைவபரிபாலனசபைப் பிரசுரங்கள் சிலவற்றையும் எனக்குத் தந்தார். அப்புத்தகங்களைப் பற்றிய எனது அபிப்பிராயத்தை அறிவிக்கலானேன்.

1. அருச்சுனன் தவநிலைச் சருக்கம்

வில்லிபாரதத்தைச் சேர்ந்த இச்சருக்கம் அடிக்கடி பரீக்ஷா பாடமாக நியமிக்கப்படுவதுண்டு. இவ்வருஷமும் இச்சருக்கம் S. S. C., H. S. C. என்னும் இரு பரீக்ஷைகட்கும் பாடமாக விதிக்கப்பட்டமையால் பதவுரை விசேடவுரை இலக்கணக்குறிப்பு முதலியவற்றோடு பண்டிதர் வே. த. சம்பந்தரால் அச்சிடப்பட்டுளது. ஆசிரியர் வைணவராயிருந்தும் சிவபரத்துவம் கூறுவது அவரது நடுநிலைமையைக் காட்டுகின்றது. தருமீற்றின் பெருமையையும் ஆசிரியர் நன்கு விளக்குகின்றனர். அவர் காலத்திலே இப்போதுள்ள வைணவச் சின்னமாகிய நாமம் இல்லையென ஊகிக்கலாம்.

பண்டிதரின் உரை மிகத் தெளிவாக எழுதப்பட்டுளது. இவ்வுரை மாணவர்க்கேயன்றி எல்லோருக்கும் பயன் தரத்தக்கது. பிரதியொன்றின் விலை ரூபா 1.

2 நிரைமீட்சிச் சருக்கம் 3 பழம்பொருந்து சருக்கம் நச்சுப் பொய்கைச் சருக்கம் நாடுகரந்துறைச் சருக்கம் இச்சருக்கங்கள் பரீக்ஷா பாடமாக விதிக்கப்பட்டபோது இவற்றிற்குப் பதவுரை, தெளிவுரை முதலியன பண்டிதர் வே. த. சம்பந்தரால் எழுதப்பட்டு அவ்வப்போது இரண்டு பாகங்களாக அச்சிடப்பட்டன. பண்டிதர் உரையாசிரியர் வழித்தோன்றலாகலின் அவர் உரையைப் பற்றிக் கூறுவது மிகையாகும்.

4 அரிச்சந்திர புராணம் (மயான காண்டம்) இப்பகுதி சில வகுப்பிற்குப் பாடமாக விதிக்கப்பட்டிருப்பதால் இதனைத் தனியாக அச்சிட்டு உரையோடு வெளியிட்டுள்ளார் நமது பண்டிதர். உரை மாணவர்க்கு ஐயந் தெளிவுபட எழுதப்பட்டுளது.

5 கலாமஞ்சரி இது யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையாரின் பாலபாட வரிசையில் எட்டாம் புத்தகம். இதன்கண் வசனபாகம் ஒன்பதும் செய்யுட்பாகம் மூன்றுமாகப் பன்னிரண்டு பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வசனபாகத்திற்கும் செய்யுட்பாகத்திற்கும் அரும்பத விளக்கம் ஒன்றாய் இணைக்கப்பட்டுளது. செய்யுட்பாகத்தில் பல நீதிக் கவிகள் திரட்டப்பட்டுள்ளன. இது கலாபூஷண மெனத்தக்கது. விலை ரூபா 0-12-0.

6 சோமவார விரத மான்மியம் சோமவார விரத மகிமையைக் கூறுவது. சீமந்தனி சரித்திரத்தை ஒருவாறு சுருக்கிக் கூறுவது. திருவிளையாடற் புராணம், உபதேச காண்டம், பிரமோத்தர காண்டம் முதலிய நூல்களைத் தழுவிப் பண்டிதர் வே. த. சம்பந்தரால் எழுதப்பட்டு சைவபரிபாலன சபையாரால் பிரசுரிக்கப்பட்டது. சிறுவர்கள் படிக்கத்தக்கது. விலை 0-3-0

7 சிவராத்திரி விரத மான்மியம். இதுவும் மேற்படியாரால் எழுதப்பட்ட சிறு நூலாகும். கந்தபுராணத்து அடிமுடி தேடிய படலத்தை ஆதாரமாகக் கொண்டு சிறுவர்களும் படித்துணரத்தக்க முறையில் எழுதப்பட்டுளது. சிவராத்திரி புராணத்துள்ள சில சரித்திரங்களையும் கொண்டது. விலை 0-2-0

8 சாவித்திரி சரித்திரம், சாவித்திரியின் சரித்திரத்தை மகாபாரதத்தைத் தழுவி எழுதப்பட்டது. சிறுவர்களுக்கு ஏற்ற நடையில் அமைந்துளது. இச்சரித்திரத்தையே சாவித்திரி வெண்பா என்னும் பெயரால் சில வருடங்களுக்கு முன்னர்த் தஞ்சை ஐ. சாமிநாத முதலியார் செய்யுளாக இயற்றி வெளியிட்டார்.

சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

## கற்றுமுற்றிய பேதையரிலக்கணங் கண்டோம்

4-ம் பக்கத் தொடர்ச்சி

னள் கோசலம் வாழ்வாள் ஒருத்தி. மற்றொருத்தி திங்களை ஒருசிறு நிபந்தனைக் குட்படுத்தி நட்பாடினாள். குடிக்கும் முன்னும் பின்னும் குணமாலையோ மதியொடு இகலிய பகைகெடப் புரியவே நினைத்தனள். மதுவெறியால் வந்து விழ்ந்த சந்திரனைப் பொற்புட் படுத்திச் சிறைசெய்யப் புக்கனள் பாண்டிநாட்டுப் பேதை. தசரதன் பரிவாரத்திருந்த மாதர் பருகிய மது அவருள்ளுறை அன்பு ஒன்றையே கனற்றிக் காட்டும் பெற்றிய தாயதைப் பின்னும் இதனால் பெறலாமே.

மதுவின் வெறியினால் தன்னையே வேறாக மயங்கின மடமங்கையர் செய்தி இரண்டு திருவிளையாடற் புராணமுடையார் கூறுகின்றார். ஆழத்திலேனும் ஆசியத்தில் அவை கம்பர் கற்பனைக்கு இணையாயிருக்கலாம்:-

"ஒருத்திகண் ணுண்டென் றுடன்
உருவங் கறவுட் டோன்ற
ஒருத்தியென் னுடன்வந் துண்பாள்
காணென வுண்ட தோழி
ஒருத்திவந் தென்செய் வாடன்
உருவமு நோக்கிப் பேதாய்
ஒருத்தியோ விருவ ரொன்று
ளெச்சிலென றுகுத்துவிட்டாள்"

"சாடியு ணறவ முண்டாள்
தன்னுரு வேறு பாட்டை
ஆடியு ணோக்கி நாணு அலலென்று
வென்னொத்தான கைக்கொண
டோடினர் பிறரு முண்டோ!
உயிரனார் வகுத்த கெண்ணத்
தேடினன் செய்கேனென்னத்
தேடித்தா சேடி டென்றாள்"

மதுவின் மயக்கத்தால் இவை வெகுளலரிது, தன்னையே இவ்வாறு துறக்கும் தன்மை தழுவிய தாமுலகாமமும் கள்ளும் ஒன்றெனபர் பேலோர்! இவ்வித கற்பனைகட்கு இடந்தருவதால் கள்ளின் மரபும் ஊழியூழி வாழ்!

## இந்தியாவில் அரிசி வாங்கிய கணக்கு

### அரசாங்கசபையில் பிரஸ்தாபம்

சமீபத்தில் இந்தியாவில் அரிசி வாங்கியது சம்பந்தமாக நியமன அங்கத்தவர் மேஜர். ஜே. டப்ளியூ. ஓல்டுபீல்ட் சென்ற வியாழக்கிழமை அரசாங்கசபையிற் கேட்ட பல கேள்விகளுக்குத் தொழில் மந்திரி பதிலளித்தார்.

தமமுடைய பதில்களில் இலங்கை அரசாங்கத்துக்காக இந்தியாவில் அரிசி வாங்குவதற்கு நேர்ந்த சமயங்களை அவர் விவரித்தார். உணவு சப்ளைப்பகுதி நிறுவப்பட்ட பிறகு அரிசி வாங்கியது பற்றிய கணக்கு வழக்குகள் அந்த இலாகாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

1943ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 31ந் திகதிவரை அரிசி வாங்கிய அதிகாரிகளால் பின்வரும் தொகை கையாளப்பட்டிருக்கிறது:-

திரு. ஏ. பி. சப்வானி 86 லட்சத்து எழுபதாயிரம் ரூபாய். திரு. கந்தவாலா ஒருகோடியே ஒரு லட்சம் ரூபாய். திரு. ஏ. வி. லைடன 26 லட்சம் ரூபாய்.

## சிங்களம் வழிகாட்டுகிறது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தை எல்லாம் உதறித்தள்ளிவிட்டுத் தாய் மொழியை அரசாங்க ஜீவன மொழியாகச்செய்ய முன்வந்திருக்கிறது என்றால் இதை ஒரு மாயமந்திரம் என்றும் எண்ணவும் செய்கிறது.

ஆனால், தமிழ் நாட்டின் நிலைமை என்ன? தமிழ்நாடு தமிழ்ப் பேசுவோர் நாடுதான். அத்துடன் பாமர மக்களின் தொகையும் அதிகம். முக்காலே மூன்று வீசம் பேருக்கு ஆங்கிலம் என்பது என்ன என்றும் தெரியவராது. அப்படியிருந்தும் இங்கு அரசாங்க மொழி ஆங்கிலந்தானே. இதைக் கண்டால் நாம் வெட்கமும் துக்கமும் கொள்ளத்தானே வேண்டியிருக்கிறது.

தாய்மொழியை அடுப்பு மூலை மொழியாகவும் உயிரற்ற சடலம் போன்றநிலைமையிலும் வைத்திருக்கும் நம்மை நாம் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் யோக்கியதைதான் உண்டா? இத்தகைய மானங்கெட்ட நிலைமையை ஒழிக்க முன்வருவது எக்காலம்? இந்தச் சின்னஞ்சிறு நாட்டைப் பார்த்தாயினும் நாம் சுயஅறிவும் சுயமொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும் மெய்யொளியும் பெறலாகாதா?

## காந்திஜி வெடிகுண்டை வீசிவிட்டாரா?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார் என்பதையும் நன்கு வெளியிடுகிறது, மகாத்மாவைவிடுதலைசெய்துவிட்டால் அரசியல் நிலைமையிலும் மாறுதல் ஏற்படும் என்று பலர் பலமாகக் கனவுகண்டார்கள்; அரசாங்கத்திடமிருந்து சமரச சமிக்ஞை வராமல் இருப்பதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லை. ஆகவே, அவர்களுடைய கண்களை இந்தக் கடிதம் திறந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மகாத்மாகாந்தி தமக்கு யோசனை கூறுமாறும் ஒத்தாசை செய்யுமாறும் அழைக்கும் தலைவர்களும் தேசமும் இப்பொழுது கவனிக்க வேண்டிய பிரதானமான விஷயம் இருக்கிறது. அதாவது மகாத்மா காந்தி காங்கிரஸ் தீர்மானத்தை அடிப்படையாகக்கொண்டு சமரசப் பேச்சுகளை நடத்துவதற்கு வைஸ்ராய் ஆகஸ்ட் கலவரத்தையும் அதற்குப் பின்னரும் நடந்த சம்பவங்களையும் மறந்துவிட்டு எவ்வளவு தூரம் வசதியளிப்பார் என்பதே பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். ஆகஸ்ட் தீர்மானத்திலகாணப்படும் நிபந்தனை ஷரத்தை விட்டுவிட்டு பாக்கியுள்ளதற்கு புதிதாக மகாத்மா அங்கீகாரம் பெறவேண்டும் என்று வைஸ்ராய் விரும்பினால் முதலில் அவர் இதர காங்கிரஸ் தலைவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் வைஸ்ராயுடனும் முஸ்லிம்லீக் தலைவராகிய ஜனாப் ஜின்னாவுடனும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் மகாத்மாவால் இதர காங்கிரஸ் தலைவர்களையும் கலந்து யோசிக்க முடியும்.

## அதிக லாபத்துக்கு மா விற்றவர்

### ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டார்

களுத்துறை யூன் 3

களுத்துறையைச் சேர்ந்த கட்டுக்குருந்தை என்னுமிடத்திலுள்ள ஏ. வி. எம். லத்தீப் என்பவருடைய கடையில் விற்பனையாளராகவிருக்கும் ஏ. ஆர். எம். அப்துல காதர் மீது தொடரப்பட்ட ஒரு வழக்கில் களுத்துறை நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் எதிரிக்கு ரூபாய் 100 அபராதம் விதித்தார். ஒரு றாத்தல் மாவின் கட்டுப்பாட்டு விலை 18 சதமாகவிருக்க 20 சதத்துக்கு மா விற்றதாகவும் கூப்பன் வாங்காமல் விற்றதாகவும் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை எதிரி ஒப்புக்கொண்டார்.

## சிதையில் வைத்ததும் உயிர்பெற்ற ஸ்திரீ

### வீட்டிற்குக் கொண்டுவரப் பட்டார் ஆனால் மாலையில் மீண்டும் மரணம்

டாக்கா யூன் 1

சிதையில் வைத்ததும் ஒரு ஸ்திரீ உயிர்பெற்ற சம்பவம் நாராயணகஞ்சிலிருந்து கிடைத்திருக்கிறது. சோகையாலும் இதர நோயாலும் துன்புற்று வந்த இவள் சென்ற ஞாயிறு மாலை இறந்து விட்டதாகக் கொண்டு உறவினர்களால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டாள். அங்கு சிதையில் வைக்கப்பட்டபொழுது உடலில் அசைவுகண்டு டாக்டரை யழைத்துவந்து பார்த்து உயிருப்பதற்குரிய குறிகண்டு அவளை வீட்டிற்குக் கொண்டுவந்துவிட்டனர். ஆனால் அன்று மாலையே அவள் மரணமடையத் தகனஞ் செய்யப்பட்டாள்.

## நுவரெலியா இடைத்தேர்தல்

அரசாங்கசபை நுவரெலியா ஸ்தானத்துக்கு நடைபெறவிருக்கும் இடைத்தேர்தல் ஜூலை மாதம் 22-ந் திகதிக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. திருவாளர்கள் டபிள்யூ. ஏ. பி. சொய்சா, எம். சுப்பையா அபேட்சகர்களாவர்.

திரு. எம். டி. பண்டாவின் தேர்தலை ஆட்சேபித்துத் திரு. ஜே. டி. ரத்தினம் தொடர்ந்த வழக்கில் மிஸ்டர். பண்டா அங்கத்தவர் பதவியை இழந்தார். அதனால் ஏற்பட்ட காலி ஸ்தானத்துக்கே இந்த இடைத்தேர்தல் நடத்தப்படுகிறது.


## காணி விற்பனவு விளம்பரம்

1. கட்டிடத்திற்காகிய நிலம் பத்துப் (10) பரப்புக் கொண்டது யாழ்ப்பாணப் புகையிரதத் தானத்திற்குப் போகும் தெருவுக்குச் சமீபமாய் குறித்த புகையிரதத்தானத்திற்குச் சில யார் தூரமாயுளளது.

2. கிளிநொச்சியில் பதின் மூன்று (13) ஏக்கர் நெற்பரப்புக் கொண்ட வயல்நிலம். கிளிநொச்சிப் புகையிரதத் தானத்திற்கு ஒரு மைலுக்குட்பட்ட தூரத்திலுளளது.

விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்வரும் விலாசத்திற்குத் தெரிவிக்கவும்.

V. N. Bartlett,
off Martyn's Road, Jaffna

Mis 47 5 & 8-6-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 8 June, 1944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org